இணைப்பு (ii)

தனியுரிமை அறிக்கை

இலங்கை வங்கி (இதனகத்துப் பின்னர் 'நாம்' எம்மை/எமக்கு, 'எங்களுடைய', 'இலங்கை வங்கி' அல்லது' 'வங்கி' எனக் குறிப்பிடப்படும்) வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட தகவல்களையும் இரகசியத்தன்மையையும் பாதுகாப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது. நீங்கள் எமது இணையத்தளத்தைப் பார்வையிடும்போதோ எமது சேவைகளைப் பயன்படுத்தும்போதோ நாம் எவ்வாறு உங்களைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்கிறோம், பயன்படுத்துகிறோம், வெளிப்படுத்துகிறோம், பாதுகாக்கிறோம் என்பதை இந்த தனியுரிமை அறிக்கை தெளிவுபடுத்துகிறது.

இவ்வறிக்கை முழுவதும் 'தனிப்பட்ட தரவு' அல்லது 'தனிப்பட்ட தகவல்' என்பது உங்களுடைய பெயர், முகவரி, ஆளடையாள எண் என்பன உள்ளிட்ட ஆனால் அவை மட்டுமல்லாமல் உங்களை அடையாளம் காணக்கூடிய எந்தவொரு தகவலையும் குறிக்கின்றது. கையாளுதல், சேகரித்தல், பாதுகாத்தல், களஞ்சியப்படுத்தல் முதலான உங்களுடைய தனிப்பட்ட தரவுகள் சம்மந்தப்பட்ட நடவடிக்கைகள் யாவும் 'செயன்முறைப்படுத்தல்' எனும் ஒரு பதத்தால் குறிப்பிடப்படுகின்றது.

இத்தனியுரிமை அறிக்கையில் பின்வரும் விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. **2022ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க தரவுப் பாதுகாப்புச் சட்டத்துக்கு இணங்க தரவு சேகரிப்பு மற்றும் செயன்முறைப்படுத்தல் பற்றிய கண்ணோட்டம்.**
   இக்கூற்றானது விசேட அல்லது உணர்திறன்கொண்ட தனிப்பட்ட தரவுகளைச் சேகரித்தல், பயன்படுத்துதல் வெளிப்படுத்துதல் போன்ற விடயங்களை முன்வைத்து வடிவமைக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் வங்கியுடன் வணிகத் தொடர்பு வைத்திருந்த நபர்களுக்கும் இது பொருந்தும்.

2. **நாம் வைத்திருக்கும், சேகரிக்கும், செயன்முறைப்படுத்தும் தகவல்கள்.**

   உங்களுடைய பெயர், தொடர்பு விபரங்கள், ஆளடையாள விபரங்கள், பிறந்த திகதி, நிதிசார் தகவல்கள், பரிவர்த்தனை பற்றிய தரவு, அட்டை மூலம் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் பற்றிய தகவல்கள், பால்நிலை, இனம் முதலான உங்களால் நேரடியாகவோ மறைமுகமாகவோ வழங்கப்பட்ட தகவல்கள்; மூன்றாம் தரப்பினர், பொதுத் தளங்களில் பகிரப்படும் தகவல்கள் என்பவற்றின் மூலம் கிடைத்த தகவல்கள்; சாதாரண வியாபார நோக்கங்களுக்கு அவசியம் என நாம் நம்பும் இலத்திரனியல் வங்கிச் சேவைகள், எமது இணையத்தளம், குக்கீஸ்

(cookies) முதலானவற்றிலிருந்து திரட்டப்பட்ட தகவல்கள் என்பவற்றை நாம் வைத்திருக்கிறோம், சேகரிக்கிறோம், செயன்முறைப்படுத்துகிறோம். எமது சேவைகளை வழங்குவதற்கும் தங்குதடையற்ற வங்கியியல் அனுபவத்தை உறுதி செய்வதற்கும் இத்தரவுகள் இன்றியமையாதவையாகும்.

3. **நாம் எவ்வாறு உங்களுடைய தனிப்பட்ட தரவுகளைப் பயன்படுத்துகிறோம்.**

உங்களுடைய கணக்குகளை நிர்வகிக்கவும், வங்கிச் சேவைகளை வழங்கவும், பரிவர்த்தனைகளைச் செயற்படுத்தவும், எமது கணக்குகளையும் சேவைகளையும் நிர்வகித்து மதிப்பிட்டு மேம்படுத்தவும் அவற்றைச் சந்தைப்படுத்தவும், எமது இடர்களை முகாமை செய்யவும், கணக்கீடு, கணக்காய்வு மற்றும் பிற உள்ளகத் தொழிற்பாடுகளை நிறைவேற்றவும், சட்ட ஒழுங்குத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யவும் அவற்றுக்கு இணங்கவும் நாங்கள் உங்களுடைய தகவல்களைப் பயன்படுத்துகிறோம். தவிர, உங்களுடைய கணக்குப் புதுப்பிப்புகள், சலுகைகள் மற்றும் பிற சேவை தொடர்பான அறிவித்தல்கள் என்பவற்றை உங்களுக்கு அனுப்புதல் முதலான தொடர்பாடற் தேவைகளின் பொருட்டும் நாம் உங்களுடைய தனிப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தலாம்.

நாம் உங்கள் தனிப்பட்ட தரவுகளைப் பயன்படுத்துவதற்கான நோக்கங்கள்

இலங்கை வங்கியாகிய நாம் உங்களின் தேவைகளுக்கேற்ற கணக்குகளையும் சேவைகளையும் வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகிறோம். நாம் ஒப்புக்கொண்டுள்ள கடப்பாடுகளை நிறைவேற்றவும் ஆகச்சிறந்த சாத்தியமான சேவைகளை வழங்கவும் கீழ்க்காணும் நோக்கங்களின் பொருட்டு நாம் உங்களுடைய தனிப்பட்ட தரவுகளைச் செயற்படுத்துகிறோம்.

1. **உங்களுடைய கோரிக்கைகளைச் செயன்முறைப்படுத்துதல்**

எமது கணக்குகள் மற்றும் சேவைக்கான விண்ணப்பங்களைக் கையாளுதல், கொடுப்பனவுகளைச் செயற்படுத்துதல், பரிவர்த்தனைகளை மேற்கொள்ளுதல், உங்களுடைய கோரிக்கைகள், அறிவுறுத்தல்களை உரிய நேரத்தில், சரியான முறையில் நிறைவேற்றுதல் முதலானவற்றின் பொருட்டு நாம் உங்களுடைய தரவுகளைச் செயன்முறைப்படுத்துகிறோம். உங்களுடைய வங்கிச் சேவை அனுபவங்களை மேம்படுத்துவதற்கு மின்னணு வங்கிச் சேவைகளை வழங்குதல் உட்பட நாங்கள் பயன்படுத்தும் ஒவ்வொரு மார்க்கமும் இதில் உள்ளடங்கும்.

2. **பொருத்தப்பாட்டினை மதிப்பிடல்**

உங்களுடைய குறிப்பான தேவைகளுக்கும் தேவைப்பாடுகளுக்கும் அமைய எமது கணக்குகளையும் சேவைகளையும் வடிவமைக்கும் பொருட்டு அவற்றுக்கான உங்களது பொருத்தப்பாட்டை நாம் மதிப்பிடுகிறோம்.

3. கடன் மதிப்பீடு

பொறுப்பு வாய்ந்த கொடுகடன் செயற்பாடுகள், நிதி ஸ்திரத்தன்மை என்பவற்றை உறுதிப்படுத்த கடன் சரிபார்ப்புகள் மற்றும் கடன் வரம்புகளை அமைத்தல் உள்ளிட்ட கடன் மதிப்பீடுகளை நாம் முன்னெடுக்கின்றோம்.

4. தொழிற்பாட்டு மற்றும் புள்ளிவிபர நோக்கங்கள்

உங்களுடைய தரவு தொழிற்பாட்டு மற்றும் புள்ளிவிபர நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. எமது சேவைகளை மேம்படுத்தவும் எமது ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளைத் திறம்பட நிறைவேற்றவும் உங்களுடைய தரவு எங்களுக்கு உதவுகிறது.

5. வங்கித் தொடர்புகளும் பாதுகாப்பும்

நாம் வங்கித் தொடர்புகளையும் கணக்குகளையும் உருவாக்கி தொடர்ந்து முகாமை செய்வதுடன் உங்களுடைய பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு எமது வளாகங்களையும் ATM இயந்திரங்களையும் கண்காணித்து வருகின்றோம்.

உங்களுடைய தனிப்பட்ட தரவுகளை வெளிப்படுத்தல்

உங்களுக்குச் சேவையாற்றும் பொருட்டும் எமது ஒப்பந்தரீதியான கடப்பாடுகளை உறுதியாகப் பின்பற்றும் பொருட்டும் வங்கியானது பின்வரும் தரப்பினருக்கு உங்களைப் பற்றிய தரவுகளை வெளிப்படுத்துகிறது.

1. தொழில்முறை ஆலோசகர்கள், பங்காளர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள்

எமது சேவைத் தரங்களை உறுதிசெய்துகொள்ளும் பொருட்டு வெளிப்படுத்தாமை உடன்படிக்கைகள் / இரகசியம் பேணல் கடப்பாடுகள் என்பவற்றுக்கு அமைவான வங்கியின் வியாபார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் தொழில்முறை மதியுரைஞர்கள், ஆலோசகர்கள், கடன் தரப்படுத்தல் முகவர்கள், காப்புறுதி நிறுவனங்கள், காப்புறுதி தரகர்கள், கணக்காய்வாளர்கள், மூன்றாந் தரப்பு சேவை வழங்குநர்கள், முகவர்கள், தொடர்பு வங்கிகள், நிதி நிறுவனங்கள், பரிமாற்று நிலையங்கள், சுயாதீன ஒப்பந்ததாரர்கள் முதலானவர்களுடன் நாம் உங்களுடைய தனிப்பட்ட தகவல்களைப் பகிர்ந்துகொள்கிறோம்.

2. வியாபாரத் தொடர்புப் பங்காளர்கள்

உங்களுடைய தேவைகளை நிறைவேற்றவல்ல பற்பல தெரிவுகளை மேம்படுத்தி நீங்கள் விரும்பக்கூடிய கணக்குகளையும் சேவைகளையும் வழங்கும் எமது வியாபாரத் தொடர்புப் பங்காளர்களுடன் நாம் உங்களுடைய தரவுகளைப் பகிர்ந்துகொள்கிறோம்.

3. வங்கி அட்டை சங்க உறுப்பினர்களும் வியாபாரிகளும்

அட்டை மூலமான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் வசதியை வழங்கும் பொருட்டு வங்கி அட்டை சங்கத்தின் உறுப்பினர்க்கும் வியாபாரிகளுக்கும் உங்களுடைய தனிப்பட்ட தரவுகளை வழங்குகிறோம்.

4. அற்றோணித் தத்துவதாரர், சட்டரீதியான பிரதிநிதிகள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள்

அற்றோணித் தத்துவத்தின் ஊடாக உங்களால் நியமிக்கப்படும் அற்றோணித் தத்துவதாரருடன் நாம் உங்களுடைய தனிப்பட்ட தரவுகளைப் பகிர்ந்து கொள்வோம்.

குழந்தை எனின் அது பற்றிய தனிப்பட்ட தரவுகளை அதன் பெற்றோருக்கு அல்லது சட்டரீதியான பாதுகாவலருக்குத் தெரியப்படுத்துவோம்.

நீங்கள் இறந்துவிட்டால் அல்லது ஒப்பந்தத்துக்கான தகுதியை இழந்துவிட்டால் உங்கள் சார்பில் செயற்படும் பொருட்டு உங்களுடைய தனிப்பட்ட தரவுகளை உங்களுடைய சட்டரீதியான பிரதிநிதிகள், சட்ட வாரிசுகள், நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் (பொருத்தமான முறையில்) ஆகியோருக்கு உங்களுடைய தனிப்பட்ட தரவுகளை வழங்குவோம்.

5. சட்டங்கள் மற்றும் அதிகார நிறுவனங்களுடன் இணங்குதல்

நாம் உங்களுடைய தனிப்பட்ட தரவுகளை நீதிமன்றம், நியாய சபை, நெறிப்படுத்தற் பிரிவு, சட்ட அமலாக்க முகவர், பரிமாற்று சபை, வரி அதிகார சபைகள், அல்லது வேறேதேனும் அதிகார மையங்கள் (ஒரு குற்றத்தை விசாரிக்கும் ஏதேனும் அதிகார மையம் உட்பட) என்பவற்றுக்கும் அவற்றின் முகவர்கள் / அதிகாரிகள் ஆகியோருக்கும் தெரியப்படுத்துகிறோம்.

தெரிவிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட அல்லது உள்நாட்டு அல்லது வெளிநாட்டுச் சட்டத்தால் அல்லது ஒழுங்குவிதியால் ~~அவ்வாறு~~ வெளிப்படுத்தக் கோரப்படும் எந்தவொரு நபருக்கும் உங்களைப் பற்றிய தனிப்பட்ட தரவுகளை நாம் வெளிப்படுத்துவோம்.

6. ஒன்றிணைப்பும் கையகப்படுத்தலும்

எமது வியாபாரம் அல்லது சொத்துக்கள் அனைத்தினதும் அல்லது ஏதேனும் தொடர்புபட்ட பாகத்தின் ஒன்றிணைப்பு, கையகப்படுத்தல் அல்லது விற்பனை உள்ளிட்ட பெருநிறுவன மாற்றங்கள் தொடர்பில் உங்களுடைய தனிப்பட்ட தகவல்களைப் பகிர்ந்துகொள்ளும் உரிமை எமக்கு உண்டு.

இவ்வெளிப்படுத்தல் எந்தவொரு சட்ட எல்லைக்குள்ளும் நிகழலாம் என்பதோடு இவை பொருத்தமான சட்டங்கள் அல்லது விதிமுறைகளுக்கமைய மிகக் கவனமாக மேற்கொள்ளப்படுகின்றன.

உங்கள் தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்பு

இலங்கை வங்கியாகிய எமக்கு உங்களுடைய தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது என்பது முக்கியமாகும். உங்களுடைய தகவல்கள் எங்கே சேமிக்கப்பட்டாலும் அல்லது அனுப்பப்பட்டாலும் அவை பாதுகாக்கப்படுகின்றன என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்க வேண்டும் என நாம் விழைகிறோம். உங்களுடைய தரவுப் பாதுகாப்புக்கு நாம் எவ்வாறு முக்கியத்துவமளிக்கிறோம் என்பது வருமாறு,

1. தொழில்நுட்ப மற்றும் நிறுவன நடவடிக்கைகள்

உங்களுடைய தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாப்பதற்கு கடுமையானதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான தொழில்நுட்ப மற்றும் நிறுவனப் பாதுகாப்பு நடவடிக்கை நியமங்களை நாம் நடைமுறைப்படுத்தியிருக்கிறோம். இத்தரவுகளை யாரும் அனுமதியின்றி எடுத்துக்கொள்ளவோ, வெளிப்படுத்தவோ திரிபுபடுத்தவோ, அழிக்கவோ முடியாதவாறு அவற்றைப் பாதுகாக்கும் வகையில் இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2. வெளிவாரி சேவை வழங்குநர்கள்

நாம் வெளிவாரி சேவை வழங்குநர்களுடன் இணைந்து செயற்படும்போது அவர்கள் இலங்கை வங்கியின் கடுமையான பாதுகாப்பு நியமங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கிறார்களா என்பதை நாம் உறுதிப்படுத்திக்கொள்கிறோம்.

நாம் இரகசியத்தன்மை கட்டுப்பாட்டாளர்கள் / அதிகார மையங்களாற் தேவைப்படுத்தப்படுவதற்கிணங்க இந்நியமங்களை ஒப்பந்தரீதியான ஏற்பாடுகளுக்கு ஊடாகவே நடைமுறைப்படுத்துகிறோம்.

3. வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுதலும் அதிலுள்ள இடர்களும்

உங்களுடைய தனிப்பட்ட தரவுகள், தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் பொருத்தமான ஒழுங்குவிதிமுறைகள் என்பவற்றுக்கமைய, இலங்கையோடு ஒப்பிடும் போது தரவுப் பாதுகாப்புச் சட்டங்கள் இல்லாத நாடுகள் அடங்கலாக வெளி

நாடுகளுக்கு அனுப்பப்படலாம். ஆயினும் உங்களுடைய தரவுகள் எங்கு அனுப்பப்பட்டாலும் அவை பாதுகாப்பாகவுள்ளன என்பதனை உறுதிப்படுத்துவதற்கான அனைத்து நியாயமான நடவடிக்கைகளையும் நாம் எடுக்கின்றோம்.

4. இணையத்தள இடர்கள்

நாம் பொருத்தமான பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பயன்படுத்தினாலும் இணையத்தளத்தில் தனிப்பட்ட தரவுகளை அனுப்புவது உள்ளார்ந்த அபாயங்களைக் கொண்டுள்ளது. இதில் அங்கீகரிக்கப்படாத மூன்றாந் தரப்பினரின் அணுகல் மற்றும் குறுக்கீடுகளும் அடங்கும்.

5. சர்வதேசரீதியில் தரவுகளை அனுப்புதல்

இணையவழி அனுப்பப்படும் தரவு, அனுப்புநரும் பெறுநரும் ஒரே நாட்டில் இருந்தால் கூட, பல நாடுகளையும் கடந்துவரக்கூடும். இதில் சில நாடுகள் உங்களுடைய நாட்டைக் காட்டிலும் அல்லது வதிவிடத்தைக் காட்டிலும் பலம் குறைந்த தனியுரிமை மற்றும் தரவுப் பாதுகாப்புச் சட்டங்களைக் கொண்டிருக்கக் கூடும்.

உங்களுடைய பாதுகாப்புக்கான எமது அர்ப்பணிப்பு

மேற்குறித்த சவால்கள் இருப்பினும் இவ்விடர்களைத் தணிப்பதற்கு நாம் முயற்சிக்கின்றோம். உங்களுடைய தரவுகளை அனுப்பும்போதும் சேமிக்கும் போதும் தற்காலப் பாதுகாப்புத் தொழில்நுட்பங்களையும் நெறிமுறைகளையும் பயன்படுத்துகிறோம்.

உங்களுடைய தனிப்பட்ட தரவுகளின் இரகசியத்தன்மையையும் உண்மைத் தன்மையும் நாம் தொடர்ந்து பாதுகாக்க விரும்புகிறோம். உங்களுடைய நம்பிக்கைதான் எமது அளப்பரிய சொத்து. உங்களுடைய இரகசியத்தன்மையும் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்துவதன் ஊடாக அந்த நம்பிக்கையை வெல்லவும் பாதுகாக்கவும் நாம் அயராது பாடுபடுகிறோம்.

நாம் உங்களுடைய தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாப்பது தொடர்பில் உங்களுக்கு ஏதேனும் அபிப்பிராயங்களோ கேள்விகளோ இருப்பின் தயக்கமின்றி எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுடைய இரகசியத்தன்மையும் மனநிம்மதியுமே எமக்கு முக்கியம்.

உங்களுடைய தனிப்பட்ட தரவுகளை நாம் எவ்வளவு காலம் வைத்திருப்போம்.

உங்களுடைய தனிப்பட்ட தரவுகளை சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளுக்கு இணங்கவும் அத்தியாவசிய வியாபார மற்றும் தொழிற்பாட்டுத்

தேவைகளுக்காகவும் எம்வசம் வைத்திருப்போம். வங்கிக்கும் உங்களுக்குமான தொடர்பு முடிவுக்கு வந்ததிலிருந்து 12 ஆண்டுகள் தனிப்பட்ட தரவுகள் எம்வசம் பேணப்படும். ஆயினும், ஏதேனும் சட்டத் தேவைகள் எழுந்தால் குறித்த காலப்பகுதிக்குமேல் வைத்திருக்க நேரிடும்.

சந்தைப்படுத்தல் தொடர்பாடல்

நாங்கள் உங்களது நம்பிக்கையையும் இரகசியத் தன்மையையும் மதிப்பதோடு எமது கணக்குகள் மற்றும் சேவைகள் தொடர்பில் உங்களுக்குத் தொடர்ந்தும் அறியத்தர விரும்புகிறோம். இதன் பொருட்டு குறிப்பான சில தேவைகளுக்காக நாம் உங்களுடைய தனிப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தக்கூடும்.

1. எமது சேவைகளை மேம்படுத்துதல்

சந்தை ஆராய்ச்சிகளையும் கணிப்பாய்வுகளையும் மேற்கொள்வது உங்களுடைய தேவைகளையும் விருப்பங்களையும் அறிந்துகொள்ள உதவும். இவ்வறிவு உங்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப எமது கணக்குகளையும் சேவைகளையும் மேம்படுத்த உதவும்.

2. விளம்பரப்படுத்தலும் பொழுதுபோக்கு நிகழ்வுகளும்

விளம்பர நிகழ்வுகள், போட்டிகள், அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்புகள் முதலான சந்தைப்படுத்தல் நோக்கங்களின் பொருட்டு நாம் உங்களுடைய தரவுகளைப் பயன்படுத்துகின்றோம். உங்களுக்கு மகிழ்ச்சிகரமான தருணங்களையும் பெறுமதிமிக்க சலுகைகளையும் வழங்கும் வகையில் இம்முன்னெடுப்புகள் வடிவமைக்கப்படுகின்றன.

3. சந்தைப்படுத்தல் தொடர்பாடல் மீதான உங்களது கட்டுப்பாடு

உங்களுடைய விருப்பங்கள் எமக்கு முக்கியம். சந்தைப்படுத்தல் விளம்பர ஆவணங்களை அனுப்ப வேண்டாம் என நீங்கள் கோரினால் உங்களது கோரிக்கையை மதித்து நாம் அதை ஏற்றுக்கொள்வோம். சந்தைப்படுத்தல் தொடர்பாடல் வேண்டாம் எனக்கூறும் உரிமை உங்களுக்கு உள்ளது.

இந்த உரிமையைப் பயன்படுத்த உங்களுடைய இலங்கை வங்கிக் கிளையை நாடவும். உங்களுடைய விருப்பங்களை உடனடியாக நாம் தீர்த்துவைப்போம்.

விருப்பங்களை மாற்றிக்கொள்ளல்

நீங்கள் முன்னர் விரும்பித் தெரிவுசெய்திருந்த சந்தைப்படுத்தல் ஆவணங்களையோ வேறு ஏதாவது விளம்பர அல்லது ஆய்வு ஆவணங்களையோ பெற்றுக்கொள்ள தற்போது விரும்பவில்லை எனின் அதனை நீங்கள் வெளிப்படுத்தும் பட்சத்தில் நாம் உங்கள் கோரிக்கையை ஏற்றுக்கொள்வோம். ஆயினும், ஆவணக் காப்பின் பொருட்டு

உங்களுடைய விருப்பத்தை உறுதி செய்து நாம் ஒரு ஆவணத்தை வைத்துக்கொள்ளக் கூடும். இதன் பிறகு உங்களுடைய விருப்பங்களையும் தனியுரிமையையும் மதிக்கும் வகையில் உங்களுக்கு சந்தைப்படுத்தல் தொடர்பாடல்கள் எவையும் அனுப்பப்படா.

உங்களுடைய இலத்திரனியல் தொடர்பாடல்களைக் கண்காணித்தல்

வங்கியின் இணக்கக் கொள்கையின் தரத்தைப் பேணும் பொருட்டு எம்முடனான உங்களுடைய இலத்திரனியற் தொடர்பாடல்களை நாம் எமது சட்ட வரையறைகளுக்கமைவாகப் பதிவு செய்யக்கூடும். நாம் மேலே சுட்டிக் காட்டிய தேவைப்பாட்டுக்கு அமைய எமது சட்டரீதியான கடப்பாடுகளுக்கும் உள்ளகக் கொள்கைகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பதை உறுதிசெய்யும் வகையில் இந்நடைமுறை வழக்கத்தில் உள்ளது.

இலத்திரனியல் தொடர்பாடலைக் கண்காணிப்பதன் மூலம் பாதுகாப்பானதும் இணக்கமானதுமான சூழல் ஒன்றை எமது தொடர்பாடல் மீதான நம்பிக்கையைக் கட்டியெழுப்பியவாறே நாம் பேணுகின்றோம்.

உங்களுடைய தனியுரிமைகள்

உங்களுடைய தனியுரிமை எமக்கு மிக முக்கியம் என்பதோடு உங்களுடைய தனிப்பட்ட தரவுகள் உங்களுடைய கட்டுப்பாட்டில் இருப்பதை உறுதிசெய்ய நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். பொருத்தமான சட்டங்கள், ஒழுங்கு விதிமுறைகள், வங்கித்துறைசார் வழிகாட்டல்கள் என்பவற்றுக்கமைய உங்களுக்குள்ள உரிமைகள் வருமாறு :

1. **தரவுகளைப் பெற்றுக்கொள்ளல்**

உங்களுடன் தொடர்புடைய தனிப்பட்ட தரவுகளின் பிரதி ஒன்றைக் கோரும் உரிமை உங்களுக்கு உண்டு. சட்ட அனுமதிக்கிணங்க குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் இக்கோரிக்கைக்கு கட்டணம் ஏதும் அறவிடப்படலாம்.

2. **திருத்துதல் அல்லது முழுமைப்படுத்தல்**

உங்களுடைய தனிப்பட்ட தரவுகளை இற்றைப்படுத்தித் துல்லியமாகப் பேணும் பொருட்டு எந்தவொரு தவறான அல்லது பழைய தரவையும் திருத்துவதற்கான நியாயமான நடவடிக்கைகளைத் தாமதமின்றி எடுப்போம்.

அதற்கமைய, உங்களுடைய தனிப்பட்ட தரவுகள் திருத்தப்பட வேண்டும் எனின் அதற்கான கோரிக்கையை உங்களுடைய கிளை ஊடாக சமர்ப்பிக்க முடியும்.

3. **அழித்தல்**

உங்களுடைய தனிப்பட்ட தரவுகளைத் தொடர்ந்து பேணுவதற்கு தற்போதுள்ள ஏதேனும் சட்டங்களால் அறிவுறுத்தப்பட்டாலே ஒழிய, நீங்கள் உங்களுடைய தனிப்பட்ட தரவுகளை அழிக்கக் கோரலாம்.

முறைப்பாடுகளைத் தீர்த்து வைத்தல்

உங்களுடைய தனிப்பட்ட தரவுகளைச் செயன்முறைப்படுத்துதல் தொடர்பான உங்களுடைய கருத்துக்களை நாம் சிரத்தையுடன் கருத்திற்கொள்கின்றோம். அப்பிரச்சினைகள் தீர்க்கப்படும் விதம் குறித்து உங்களுக்கு ஏதேனும் முறைப்பாடுகள் இருப்பின் பின்வரும் நடவடிக்கைகளை நீங்கள் எடுக்கலாம்.

1. **கிளை மட்டத்திலான தீர்வுகள்**

முதலில் நீங்கள் உங்கள் முறைப்பாடு தொடர்பில் கிளையில் கலந்துரையாடுங்கள். அவர்கள் உங்கள் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அதனைத் தீர்த்து வைப்பதற்கு உங்களுக்கு உதவுவர்.

2. **இலங்கை வங்கியிலுள்ள தகவற் பாதுகாப்பு அலுவலர்**

தொடர்பு விவரம்;

மேலதிக விவரங்களுக்கும் உதவிகளுக்கும் dpo@boc.lk என்ற எமது மின்னஞ்சல் ஊடாக எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்.

எழுத்து மூலக் கோரிக்கையை அனுப்பவேண்டிய முகவரி;

தகவற் பாதுகாப்பு அலுவலர்,
11ஆம் மாடி
இலங்கை வங்கி
தலைமை அலுவலகம்
கொழும்பு 01.

நாம் உங்களுடைய பிரச்சினைகளை உடனடியாகவும் வினைத்திறனுடனும் தீர்த்து வைப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றோம் என்பதோடு இச்செயன்முறையில் உங்களுக்கு உதவுவதற்கும் தயாராகவுள்ளோம்.

3. **தகவற் பாதுகாப்பு அதிகார சபை**

இவை தவிர தகவற் பாதுகாப்பு அதிகார சபையில் முறைப்பாடு ஒன்றைப் பதிவுசெய்யும் உரிமையும் உங்களுக்கு உண்டு.

எமது தனியுரிமைக் கொள்கையைப் புதுப்பித்தல்

இலங்கை வங்கியாகிய நாம் உங்களுடைய தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிப்பதை எமது தலையாய கடமையாக் கொண்டுள்ளோம். உங்களுடைய தரவுகள் எவ்வாறு கையாளப்படுகின்றன என்பது உங்களுக்கு அறிவிக்கப்படுகின்றது என்பதை உறுதிசெய்ய நாம் எமது கொள்கையினைக் காலத்துக்குக் காலம் புதுப்பிக்கின்றோம்.

எமது தனியுரிமைக் கொள்கையில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் தொடர்பில் அறிந்துகொள்ள எமது இணையத்தளத்தை மீண்டும் பார்வையிடவும்.

இறுதியாகப் புதுப்பிக்கப்பட்ட திகதி: 2024.01.12

இணைப்பு இணையத்தளங்கள் பற்றிய பொறுப்புத்துறப்பு

எமது தனியுரிமைக் கொள்கை எமது தளத்துக்கும் சேவைகளுக்கும் மட்டுமே பொருந்தும் என்பதோடு நீங்கள் எமது இணைய விளம்பரங்களைக் காணக்கூடிய மூன்றாந் தரப்பு இணையத் தளங்களுக்கும் எம்மால் செயற்படுத்தப்படாத அல்லது கண்காணிக்கப்படாத இணைப்பு இணையத்தளங்களுக்கும் இது பொருந்தாது.

வழங்கப்பட்ட இணைப்புகள் ஊடாக ஏனைய இணையத்தளங்களுக்குச் செல்லும்போது அவர்களுடைய தனியுரிமைக் கொள்கைகளும் நடைமுறைகளும் எம்முடையதிலிருந்து முற்றிலும் வேறானவை என்பதை நினைவிற்கொள்க.